# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● அக்டோபர் 14, 2017 Weekly E-paper ● October 14, 2017


# சடசடவெனச் சரியும் பா.ஜ.க

● சுப.வீரபாண்டியன்



சமூக வலைத் தளங்களிலும், ஊடகங்களிலும் தூக்கி நிறுத்தப்பட்ட பாஜகவின் பொய்யுருவம், சரியத் தொடங்கியுள்ளது. ஒருபக்கம், மிகப்பெரிய ஊழல் குற்றச்சாற்று, மறுபக்கம், உள்ளாட்சித் தேர்தல்களில் மிகப் பெரிய தோல்வி என்று இருமுனைத் தாக்குதலுக்கு உள்ளாகி நிற்கிறது பாஜக.

அமித் ஷாவின் மகன் ஜே ஷாவின் நிறுவனம், ஒரே ஆண்டில் எண்ணிப்பார்க்க முடியாத அளவு தன் வணிகத்தைப் பெருக்கி, பெரும்பொருளை லாபமாக ஈட்டியிருப்பது எப்படி என்று நாடு முழுவதும் கேள்விக்கணைகள் எழுந்துள்ளன. அவர்களின் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ். கூட, அவர்களைக் கைகழுவியது போலத்தான் அறிக்கை விட்டுள்ளது. அடிப்படை ஆதாரம் இருந்தால், விசாரணை தேவைதான் என்று கூறியுள்ளது.

பாஜகவின் தலைவர்கள் இருவர் ஊழல் குற்றச்சாற்றை விசாரிப்பதில் ஏன் தாமதம் என்று கேட்டுள்ளனர். அவர்களுள் யஷ்வந்த் சின்ஹா முதன்மையானவர். சத்ருகன் சின்ஹாவையும் ஒரு நடிகராக மட்டும் பார்க்க முடியாது. அவர் வாஜ்பாய் அமைச்சரவையில் அமைச்சராகவே இருந்தவர். அவர் உண்மைகளை ஏன் மறைக்க முயல்கின்றீர்கள் என்று நேரடியாகவே கேட்டுள்ளார்.

பாஜகவில் உள்கட்சிக் குழப்பங்கள் ஏற்பட்டு, அவை வெளிப்படவும் தொடங்கிவிட்டன. இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கை தவறான பாதையில் போய்க் கொண்டிருக்கிறது என்றும், பணமதிப்பு இழப்பு, ஜி.எஸ்.டி. வரி ஆகியவை தற்கொலை முயற்சி என்றும், கட்சியின் முதல் வரிசைத் தலைவர்களாக உள்ள யஷ்வந்த் சின்ஹா, அருண் ஷோரி, சுப்பிரமணிய சாமி, ஸ்வராஜ்யா இதழின் ஆசிரியர் ஜெகந்நாதன் ஆகியோர் விமர்சனம் செய்துள்ளனர். "என் மீது நடவடிக்கை எடுத்தால், மகிழ்ச்சி அடைவேன்" என்று யஷ்வந்த் சின்ஹா வெளிப்படையாகக் கூறியபிறகும், எந்த நடவடிக்கையும் எடுக்க அஞ்சிக் கிடக்கிறது பாஜக.

இந்த நிலையில்தான், பாஜக செல்வாக்குப் பெற்றுள்ள இந்தியாவின் மேற்கு மாநிலங்களில், உள்ளாட்சித் தேர்தல்களில் பெரும் தோல்வியை அக்கட்சி பெற்றுள்ளது. சில மாதங்களுக்கு முன், மோடி, அமித் ஷா ஆகியோரின் சொந்த மாநிலமான குஜராத்திலேயே, உள்ளாட்சித் தேர்தல்களில், வரலாறு கண்டிராத தோல்லவியைத் தழுவினர்.

இப்போது அதனை விடப் பரிதாபமான ஒரு தோல்வி மராட்டிய மாநிலத்தில் அவர்களுக்குக் கிடைத்துள்ளது. நான்டெட் மாவட்டத்தில் உள்ள வாஹேலா (Naned-waghala)வில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களின் முடிவு 12.10.2017 மாலை வெளிவரத் தொடங்கியது. தொடக்கத்திலிருந்தே காங்கிரஸ் கட்சி வெற்றி முகத்தில் இருந்தது. பாஜக, சிவசேனா இரண்டுமே பெரும் பின்னடைவைச் சந்தித்தன.

> **மொத்தம் உள்ள 81 இடங்களில் 69 இடங்களைக் கைப்பற்றி, காங்கிரஸ் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது.**
> **பாஜக வெறும் 4 இடங்களில் மட்டுமே வென்றுள்ளது**

இறுதி முடிவுகள் வெளியானபோது, மாநகராட்சிக்கு இணையான அத்தேர்வுநிலை நகராட்சியில் மொத்தம் உள்ள 81 இடங்களில் 69 இடங்களைக் கைப்பற்றி, காங்கிரஸ் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. பாஜக வெறும் 4 இடங்களில் மட்டுமே வென்றுள்ளது. மீதமுள்ள இடங்களில் சிவசேனாவும், சுயேட்சைகளும் வென்றுள்ளனர்.

வாஹேலா என்பது, கோதாவரி நதியின் தென்கரையில் உள்ள, மரத்வாடாவின் மூன்றாவது பெரிய நகரம். இந்தியாவிற்கே பருத்தியை வழங்கும் பூமி அது. தொழில்துறையில் குறிப்பிடத்தக்க ஊர் அது!

செல்வாக்கு மிகுந்த குஜராத், மராட்டியம் ஆகிய மாநிலங்களிலேயே பாஜக தோல்வி அடைந்திருப்பது, மோடியின் சரித்திரம் முடிவுக்கு வந்து கொண்டிருப்பதையே காட்டுகின்றது.

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## ● பெரியவரின் பேருள்ளம்



நீடாமங்கலத்தைச் சேர்ந்த, சென்னை, கோட்டூர்புரத்தில் வாழ்ந்துவரும், சுயமரியாதைக் கொள்கையினரான பெரியவர் பி.வி.ராஜகோபால் - சுலோச்சனா இணையர், திராவிடத் தமிழர் அறக்கட்டளைக்கு ரூ.20000/ ஐ, தங்களின் நன்கொடையாக வழங்கியுள்ளனர். உடல் நலம் குறைகின்றது என்பதை உணர்ந்த பெரியவர் பி.வி.ஆர்., உடனே ஒரு காசோலையை எடுத்துத் தன் கையொப்பமிட்டு வைத்துவிட்டு என்னை அழைத்தார். அவரது அன்புக்கு நன்றி சொல்கிறது அறக்கட்டளை!

## ● தாம்பரம் பொதுக்கூட்டம்




காஞ்சி மாவட்டத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக 7.10.2017 அன்று தாம்பரத்தில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்திற்கு இ. இளமாறன் தலைமையேற்க அன்பு வரவேற்புரையாற்ற பொதுச்செயலாளர் சுப. வீரபாண்டியன் இன்றைய அரசியல் நிலவரம் குறித்துச் சிறப்புரையாற்றினார். தமிழன் பிரசன்னா, ஆதிமாறன், எஸ்.ஆர். ராஜா, சிங்கராயர், செந்தாமரைக்கண்ணன், எட்வின், நித்தியா, தாம்பரம் செந்தில், ஜெப்ரி உரையாற்றினர். மோகன், சக்திவேல், விக்னேஷ் ஆகியோர் கலந்துக்கொண்டனர். இறுதியில் தோழர் மானேக்ஷா நன்றி கூறினார்.

## ● பேரவை பயிலரங்கம்



பேரவையின் வடக்கு மண்டலம் சார்பாக 8.10.2017 அன்று சென்னை தலைமை அலுவலகத்தில் பயிலரங்கம் நடைபெற்றது. பயிலரங்கில் சமூக நீதி குறித்துத் தோழர் சுப.வீரபாண்டியன் தோழர்களுக்குப் பயிற்சியளித்துக் கலந்துரையாடினார்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

# ரூபாய் 80,00,00,000 ஊழல்

**ஊ**ழலுக்கு எதிராகப் பேசிப் பேசித் தன்னை 'மிஸ்டர் கிளீன்' என்று காட்டிக் கொண்டவர் மோடி.

பெங்களூர் எடியூரப்பா தொடங்கி மும்பையைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் நிதின் கட்காரி வரை ஊழல் பேசப்பட்டது.

இப்பொழுது ஜீ.... பூம்பா பூதத்தைப் போல 'ஜெய் ஷா குண்டால்' என்ற மாபெரும் ஊழல், அமித்ஷா மகன் வடிவில் உருவெடுத்துள்ளது.

2012 ஆம் ஆண்டில் ரூபாய் 50,000 இல் நிறுவனம் தொடக்கம். முதலாண்டில் 6,230 ரூபாய், 2013 இல் 1,724 ரூபாய், 2014 இல் 18,728 ரூபாய் இழப்பு ஏற்பட்ட இந்த நிறுவனத்திற்கு 2015 - 2016 நிதியாண்டில் மட்டும் 80 கோடி ரூபாய் வரவு செலவு ஆகியுள்ளது.

இது எப்படிச் சாத்தியமானது? இதற்குப் பின்புலமாக இருந்தவர் அன்றய மத்திய மின்துறை அமைச்சர் பியூஷ் கோயல். இது எப்படி மிஸ்டர் கிளீன் மோடிக்குத் தெரியாமல் போயிருக்கும்.

பாஜக மோடி ஆட்சியின் மிகப் பெரும் ஊழல் மட்டுமன்று, அதிகார வரம்பு மீறலும் இதில் உள்ளடங்கிருக்கிறது.

பத்துமடங்கு வருமானம் உயர்ந்தாலே அத்தனை துறைகளையும் பயன்படுத்தி விசாரணை செய்யும் மோடி, ஜெய் ஷா நிறுவன வருமானம் ஒரே ஆண்டில் மட்டும் பன்மடங்கு உயர்ந்துள்ளது. இதை மோடி விசாரணை நடத்தாதது ஏன் என்று ராகுல்காந்தி குரல் எழுப்புகிறார். இவர் எதிர்கட்சியைச் சேர்ந்தவர்.

ஆனால், பாஜகவைச் சேர்ந்த முக்கிய தலைவர்களுள் ஒருவரான யஷ்வந்த் சின்ஹாவே இந்த ஊழலுக்கு எதிராக அறிக்கை வெளியிடுகிறார்.

அமித் ஷா மகன் ஜெய் ஷாவைப் பாதுகாக்க மத்திய அமைச்சர் இவ்விவகாரத்தில் இறங்கி உள்ளதாகவும் -

இந்த மாபெரும் ஊழல் குற்றச்சாட்டில் மத்திய அரசின் கூடுதல் சொலிசிட் ஜென்ரல் துஷார் மேத்தா, இந்தத் தனிநபர் வழக்கில் எப்படி வாதாடலாம், மத்திய சட்ட அமைச்சகம் இதற்கு எப்படி அனுமதி அளித்தது, இது மிகப்பெரும் விதிமீறல், ஊழல் என்கிறார்கள் யஷ்வந்த் சின்ஹா, சந்துருகன் சின்ஹா.

முந்தய காங்கிரஸ் ஆட்சியின் போது ஊழலுக்கு எதிராக என்று சொல்லி அன்னா அசாரே, கிரன்பேடி போன்றோரை வைத்துப் போராட்டம் நடத்தினார் மோடி.

இன்று அசாரேயைக் காணவில்லை. உழைப்புக்கேற்ற ஊதியம் கிரன்பேடிக்குக் கிடைத்துவிட்டது.

ஜெய் ஷா ஊழலுக்கு மோடி வாய்திறக்காமல் இருப்பது ஏன்? விசாரணை நடத்தாமல் இருப்பது ஏன்?.

பதில் சொல்லும் காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது.

பாஜக ஆட்சியின் சரிவுக்கு விழுந்த பெரிய அடி இது.



# பெரியார் விதைத்தது தமிழ்நாட்டில் அறுவடை ஆனது கேரளாவில்


● இரா.உமா

தமிழ்நாட்டில் தந்தை பெரியார் விதைத்தது, இப்போது கேரளாவில் முதல் அறுவடையைத் தந்துள்ளது. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தின்படி, பார்ப்பனர் அல்லாதோர் 36 பேரை அர்ச்சர்களாக நியமித்துள்ளது இடதுசாரிக் கேரள அரசு. மாநில அறநிலையத் துறையின் கீழ் இயங்கும், திருவிதாங்கூர் தேவசம் போர்டின் கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களில், 26 பார்ப்பனர்களோடு, பார்ப்பனர் அல்லாத 36 பேரும் அர்ச்சகர்களாகப் பணியாற்ற இருக்கின்றனர். அவர்களுள் 6 பேர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது கூடுதல் சிறப்பு. இந்து மதத்தின் சனாதனத் திமிரைக் காலில் போட்டு மிதித்தபடி, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த யேடு கிருஷ்ணன் மணப்புரம் சிவன்கோவிலுக்குள் அர்ச்சகராக நுழைந்து பூசைகளைச் செய்துள்ளார். மலையாள மண்ணில் மனுநீதிக்கு மரண அடி கொடுத்துள்ள முதல்வர் பினராயி விஜயனுக்கு முதலில் நம்முடைய பாராட்டும், வாழ்த்தும்.

இந்து மதத்தின் வேர் சாதியில் உள்ளது. சாதியின் பாதுகாப்பு கோவில் கருவறையில் உள்ளது. வருணசாதி அடுக்குகளைத் தங்கள் சுயநலத்துக்காகக் கட்டிக்காக்கத் துடிக்கும் ஒரு கூட்டத்தார், அந்த இடங்களைத் தக்க வைத்துக்கொள்வதில், அதி தீவிரத் தன்மையுடன் இயங்கிவருகின்றனர். அதனால்தான், சாதி ஒழிப்பை முதன்மைச் செயல்பாடாக முன்னெடுத்த தந்தை பெரியார், சாதி அடுக்குகளைப் பாதுகாக்கும், கோவில் கருவறையில் கை வைத்தார்... அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்க வேண்டும் எனக் குரல் கொடுத்தார்.

1970, சனவரி 26ஆம் நாள் கருவறை நுழைவுப் போராட்டம் என அறிவித்தார் பெரியார். முதலமைச்சராய் இருந்த பெரியாரின் மாணவர் கலைஞர், ‘நடப்பது உங்கள் ஆட்சி, இதற்காக நீங்கள் போராடலாமா? அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக நானே ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறேன் எனக் கூறியதையடுத்து, போராட்டத்தை ஒத்தி வைத்தார் பெரியார். தான் உறுதியளித்தபடி, 1970 டிசம்பரில் அறநிலையத் துறை சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்னும் சட்டத்தைக் கொண்டு வந்தார் கலைஞர்.

அதுவரை, மணியடிப்பதற்கும், கற்பூரத் தட்டை ஏந்துவதற்கும் ஏகபோக உரிமை கொண்டாடி வந்தவர்கள், வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு, தங்களின் புகலிடமான உச்சநீதிமன்றத்தை நோக்கி ஓடினர். சில ஜீயர்கள் உள்பட 12 பேர், திமுக அரசு கொண்டு வந்த அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தை எதிர்த்து வழக்குத் தொடுத்தனர். 1972, மார்ச் 14இல் உச்சநீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பளித்தது... ‘ஆகமங்களை முறைப்படி படித்திருந்தால், எந்தச் சாதியினராக இருந்தாலும் அர்ச்சகராகத் தடையில்லை. ஆனால், மரபுகள், பழக்க வழக்கங்கள் மீறப்படக் கூடாது என்று வழக்கம் போல் புள்ளி வைத்தது உச்சநீதிமன்றம். தீர்ப்பைப் பற்றி பெரியார் சொன்னார், ‘அறுவை சிகிச்சை வெற்றிதான். ஆனால் நோயாளி இறந்துவிட்டாரே. இது என் நெஞ்சில் தைத்த முள்ளாகிவிட்டது’ என்றார். இதுபோன்று தீர்ப்புகளில், மத நம்பிக்கைகளில் சட்டம் குறுக்கிடக் கூடாது என்று சொல்லும், அரசியல் சட்டப்பிரிவு 25, 26 ஆகியவற்றை நீக்க வேண்டும் என்று பெரியார் வலியுறுத்தினார்.







1982இல் நீதிபதி மகராஜன் குழு அளித்த பரிந்துரையின் பேரில் ஆகமக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு, விருப்பமுள்ளவர்களுக்கு ஆகமக் கல்வி வழங்கப்பட்டது. 2006இல் திமுக மீண்டும் ஆட்சியில் அமர்ந்ததும், மே 23ஆம் நாள் முதலமைச்சர் கலைஞர் ஓர் அரசாணை வெளியிட்டார். 1972 மற்றும் 2002ஆம் ஆண்டு தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டி, “இந்துக்களில் உரிய பயிற்சியும், தகுதிகளும் உள்ள அனைத்துச் சாதியினரும் தமிழ்நாட்டிலுள்ள இந்து சமய திருக்கோவில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்று அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது” என்றது அந்த அரசாணை. வழக்கம்போல், அய்யோ... சாஸ்திரங்கள் போய்விடும், சம்பிரதாயங்கள் அழிந்துவிடும், மனம் புண்பட்டுவிட்டது எனக் கூவிய சிறு குழுவின் கூச்சலுக்கு செவிசாய்த்தே பழக்கப்பட்டுப்போன உச்சநீதிமன்றத்தின் கட்டிடத்தில் இருந்து, 2008இல் தடையாணை வெளிவந்தது.

2012, டிசம்பர் 13இல் நடந்த இறுதி விசாரணையில், இந்தப் பிரச்சினையைத் தாங்களே பார்த்துக் கொள்வதாகக் கூறி கால அவகாசம் கோரியது அதிமுக அரசு. அதன் பிறகு அதனை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டது. பிறகு 2015 டிசம்பரில் வெளிவந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி சமூகநீதிச் சட்டம், கேரளாவில் இப்போது நடைமுறைக்கு வந்துவிட்டது. இங்கோ ஒரு கூட்டம் குறுக்கே விழுந்து தடுத்துக் கொண்டிருக்கிறது. திமுக அரசு பிறப்பித்த ஆணைப்படி, அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்கும் சட்டத்தைத் தமிழ்நாட்டில் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என திமுக செயல்தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, பொதுவுடைமைக் கட்சித் தலைவர்கள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் உள்ளிட்ட பல்வேறு கட்சித் தலைவர்கள் மற்றும் இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் வலியுறுத்தி வருகின்றனர். மத்திய மதவாத பாஜக அரசுக்குக் காவடி தூக்கும் அதிமுக அரசு அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்க முன்வருமா?

கோவிலுக்கு வெளியே ஒரு சாதி, கோவில் வாசல் வரை ஒரு சாதி, கொடி மரம் வரை ஒரு சாதி, கருவறையின் வெளிப்பகுதி வரை ஓரு சாதி என்றிருந்த நிலை, திராவிட இயக்கத்தின் தொடர் போராட்டங்களால், மாறிப்போனது. ஆனால் கருவறைக்கு மட்டும் ஒரே சாதி என்ற மனுநீதி நிலைபெற வைக்கப்பட்டது. கருவறையில் மணியடிப்பதும், கற்பூரம் காட்டுவதும், ஒரு வேலை மட்டுமல்ல. தாங்கள்தான் உயர்வானவர்கள், மற்றவர்கள் தாழ்வானவர்கள் என்ற பார்ப்பன சமூக ஆதிக்கத் திமிரின் குறியீடு. அதனைத் தகர்த்தெறிவதுதான் சமூகநீதியின் எல்லைக்கோடு. ●

# இராபர்ட் கால்டுவெல்



● எழில்.இளங்கோவன்

டாக்டர் ராபர்ட் கால்டுவெல் அவர்களின் தாயகம், ஸ்காட்லாந்து. ஐரோப்பாவின் மிகப்பெருந் தீவான அயர்லாந்தில் அவர் பிறந்தார். அந்நாட்டின் கிளாடி ஆற்றங்கரையில் அமைந்த பெல்பாஸ்ட் என்ற சிற்றூர் அவரின் சொந்த ஊர்.

1814 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம் நாள் அவர் பிறந்தார். தொடக்கக் கல்வியை அயர்லாந்தில் பயின்ற அவர் தன் பத்தாம் வயதில் பெற்றோருடன் ஸ்காட்லாந்துக்குப் போய்விட்டார்.

பதினோறாம் வயதில் ஆங்கில இலக்கிய இலக்கணங்களைத் தெளிவுறப் பயின்ற கால்டுவெல், தன் தந்தையின் விருப்பப் படி ஓவியத்துறையிலும் பயின்றார்.

டப்ளின் ஓவியக் கல்லூரியில் பயின்ற அவர், சிறந்த ஓவியருக்கான உயர்ந்த பரிசுகளைப் பெற்றிருக்கிறார். ஆனாலும் அவரின் சிந்தனையும் நாட்டமும் இறைப் பணியாற்றும் சமயத் துறையையே நாடியது.

அவரின் இருபதாம் வயதில், இலண்டன் மாநகரக் கிருத்துவச் சமயத் தொண்டர் சங்கத்தில் அவர் உறுப்பினராகச் சேர்ந்தார்.

இச்சங்கத்தின் சார்பில் கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் சேர்ந்து, ஐரோப்பிய மொழிகளில் அமைந்த சமய நூல்களையும், நீதி நூல்களையும், படித்த கால்டுவெல், அப்பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் சர். டேனியல் சேண்ட்போர்ட் என்பவரின் பாடப் பயிற்சியால் ஈர்க்கப்பட்டார்.

பேரசிரியர் டேனியல், கிரீக் மொழியின் சிறப்புகள், அதன் அருமை பெருமைகளைப் பிற மொழிகளுடன் ஒப்புமைப் படுத்திக் காட்டி விளக்கிய திறமையைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தார் கால்டுவெல்.

இந்த நிகழ்வே பின்னர் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுத அவருக்கு அடிப்படையாக அமைந்தது.

தென்னிந்திய திருச்சபை வேண்டுகோளை ஏற்று இலண்டன் திருச்சபை சமய பரப்புரைக்காக் கால்டுவெலைச் சென்னைக்கு அனுப்பியது. 1838 ஆம் அண்டு இளைஞரான கால்டுவெல், கப்பல் மூலம் சென்னை வந்து இறங்கினார்.

இங்கே துரூ, வின்சுலோ, பவர், ஆண்டர்சன் ஆகியத் தமிழறிஞர்களாகிய ஆங்கிலேயர்களின் நட்பு, இவரின் தமிழார்வத்தை உந்தித் தள்ளியது.

கால்டுவெல்லின் மனைவி, நாகர்கோயில் கிருத்துவச் சமயப் பணியாளரான மால்த் என்பவரின் மகள் எலிசா தமிழ்மொழியிலும், ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார் என்பது இவருக்கு கூடுதல் பலமாக அமைந்தது.

சங்க இலக்கிய இலக்கணங்களையும், பழந்தமிழ் ஏடுகளையும் தேடித் தேடிப் படித்தார். அகழ்வாய்வுகளில் ஈடுபட்டார்.

இவரின் அகழ்வாய்வில் பண்டைய தமிழர்களின் ஈமத்தாழிகளைக் கண்டறிந்து கூறினார்.

பாண்டிய நாட்டின் மீன் சின்னம் பொறித்த தங்கக் காசுகளைக் கண்டறிந்தார்.

சென்னையில் இருந்து திருநெல்வேலி சென்ற இவர் தரங்கம்பாடி, தஞ்சாவூர், நீலகிரி, கோயம்புத்தூர், மதுரை வழியகச் செல்லும் போது அந்தந்தப் பகுதி மக்களின் வட்டாரத் தமிழ், பேச்சு மொழி, பண்பாடுகள் குறித்து அறிந்து கொண்டு வந்தார். அத்துடன் இவரின் தமிழ்க்கல்வி, வரலாற்றுக் கல்வி, அகழ்வாய்வும் சேர்ந்தன.

"திருநெல்வேலி மாவட்டத்தின் அரசியல் மற்றும் பொது வரலாறு" (A Political and General History of the District of Tirunelveli) என்ற புகழ் பெற்ற நூலை எழுதினார்.

இந்நூலை 1881 ஆம் ஆண்டு அன்றைய மதராஸ் அரசு வெளியிட்டுள்ளது.

1856 ஆம் ஆண்டு Comparative Grammar of the Dravidian of South Indian Family Language என்ற ஆங்கில நூலை எழுதினார்.

இந்நூல் உலக அளவில் கால்டுவெல்லுக்குப் புகழைக் கொடுத்தது மட்டுமல்லாமல், உலக அளவில் மொழியியல் ஆய்வுக்குப் பெரிதும் துணை செய்யும் நூலாகவும் அமைந்து விட்டது.

இந்நூலுக்காக அவர் படித்த கிளாஸ்கோ பல்கலைக் கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கி உள்ளது.

தமிழில் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்று அழைக்கப்படும் இந்நூலின் தமிழ் வடிவப் பெயர் "திராவிட அல்லது தென்னிந்திய மொழிக் குடும்பங்களின் ஒப்பிலக்கணம்".

இந்நூலில் குஜராத்தி, மராத்தி, ஒரிசா, தக்காணப்பகுதி, நீங்கலாகப் பலுசிஸ்தானம், வங்காளத்தின், இராஜ்மகால் மலைகள் தொட்டு, கன்னியாகுமரி வரையும் திரவிட மொழிக் குடும்ப மொழிகளே ஆளப்பெற்றிருந்தது. என்கிறார் கால்டு வெல்.

"இந்திய நாட்டின் வடபகுதியிலோ, தென் பகுதியிலோ சமஸ்கிருதம் என்று அழைக்கப்படும் வடமொழி, உள்நாட்டு மொழியாக இருந்ததில்லை. அப்படி நம்பவும் வழியில்லை" என்றும் –

"உள்நாட்டுச் சிற்றூர் மக்கள், நாட்டுப் புறங்களிலும் வாழ்ந்து வரும் தாழ்த்தப்பட்ட மக்கள், வட மொழிச் சொற்களைப் பேச்சு வழக்கில் கையாளாமல், ஒதுக்கித் தள்ளும் தூய பழக்கம் காணப்படுகிறது. ஒரு மொழியின் தொன்மைச் சிறப்புகளை, அம்மொழியிலும், செய்யுள்களிலும், தாழ்த்தப்பட்ட குடி மக்களின் பேச்சுகளில் இருந்தே ஆய்ந்து காணமுடியும் என்பது உண்மை" என்றும் –

"தமிழ் என்னும் சொல்லுக்கு நேர் வடமொழிச் சொல் திரவிடம் என்பதாகும். இச்சொல் தமிழர் அல்லது திராவிடர் வாழ்ந்த நாட்டையும், அவர்கள் பேசும் மொழியையும் ஒன்றெனக் குறிப்பதாகும். தமிழ் என்ற சொல்லின் ஒலி வடிவிற்கும், திராவிடம் என்ற சொல்லின் ஒலி வடிவிற்க்கும் இடையே எத்துனையோ வேறுபாடு காணப்பட்டாலும், இரண்டும் ஒரே வேரில் இருந்தே பிறந்ததாகக் கொள்வதற்கு இடம் உள்ளது. தமிழ் என்ற சொல்லே பின்னர் திரவிடம் எனத் திரிபுற்றது என்று சொல்வதைக் காட்டிலும், திராவிடம் என்ற சொல்தான் தமிழ் என்று திரிபுற்றது என்று கூறுவது சரியானதாகும்" என்றும் –

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூலில் வரிசையாகச் சொல்லிக்கொண்டு போகிறார் கால்டுவெல்.

தமிழர் திராவிடர் இவ்விரு சொற்களும் தமிழரையே குறிக்கும் ஒரு பொருள் இரு சொற்கள் என்று டாக்டர் அம்பேத்கர் சொல்வது இங்கு கருதத்தக்கது.

திராவிடம் என்பதைக் குறியீட்டுச் சொல் என்கிறார் கால்டுவெல்.

"தமிழ்மொழி உள்ளிட்ட தென்னிந்திய மொழிகள் பலவற்றையும் குறிப்பதற்கு குறியீடொன்று தேவைப்படுகிறது. திராவிடம் என்று அதனை வகுத்துக் கொண்டால், எடுத்துக் கொண்ட ஒப்பிலக்கண முறைக்கு அது மிகவும் பயனுடையதாக அமையும்" என்றும் விளக்குகிறார்.

திராவிட மொழிக்குடும்பம், ஆரிய மொழிக் குடும்பம் எனும் இரு குடும்ப மொழிகளை திருந்திய மற்றும் திருந்தாத மொழிகளாகப் பகுத்துத் தன் ஒப்பிலக்கணத்தை விரிவுபடுதித் தமிழுக்குப் பெரும் தொண்டாற்றியிருக்கிறார் கால்டுவெல்.

முதன் முதலில் தமிழை உயர்தனிச் செம்மொழி என்று உலகுக்குப் பறைசாற்றி, 1941 முதல் நெல்லை மாவட்ட இடையன் குடியில் 50 ஆண்டுகள் வாழ்ந்து அரும் பணியாற்றித் தமிழுக்குப் பெருமை சேர்த்தார் இராபர்ட் கால்டுவெல் அவர்கள்.

தன் 77ஆம் வயதில், 1891 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 ஆம் நாள், கொடைக்கானலில் இயற்கை எய்தி தன் பணிகளை முடித்துகொண்டார். ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.